M

# முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2018

மதுரை மாவட்டம் பதினொன்றாம் வகுப்பு பதிவு எண் [ ]

நேரம்: 1.15 மணி **வணிகவியல்** மதிப்பெண்கள்: 45

## பகுதி - அ

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10×1=10**

1) தூங்கா நகரம் என அழைக்கப்படும் நகரம் எது?
அ) சென்னை ஆ) மதுரை இ) திருச்சி ஈ) கோயம்புத்தூர்

2) மருத்துவர் தொழில் என்பது ...............
அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில்
இ) சிறப்புத் தொழில் ஈ) தனியார் வணிகம்

3) விற்பனை, போக்குவரத்து, பண்டகக்காப்பு முதலியன ............... சேவையில் அடங்கும்.
அ) பொதுச்சேவை ஆ) நிதிச்சேவை
இ) தனிச்சேவை ஈ) விநியோகச் சேவை

4) கீழ்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?
அ) தனியாள் வணிகம் ஆ) கூட்டாண்மை
இ) கூட்டுறவுச் சங்கம் ஈ) நிறுமம்

5) ஒரு குறிப்பிட்ட தொழில் அல்லது செயலை செய்வதற்காக தற்காலிகமாக தொடங்கப்பட்ட கூட்டாண்மை ...............
அ) விருப்பமுறிக் கூட்டாண்மை ஆ) குறிப்பிட்டக் கூட்டாண்மை
இ) வரையறுத்த கூட்டாண்மை ஈ) இணைவினைக் கூட்டாண்மை

6) நிறுமத்தின் இயக்குனரை கீழ்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?
அ) கடனீந்தோர் ஆ) கடனாளர்
இ) கடனீட்டுப் பத்திரதாரர் ஈ) பங்குதாரர்கள்

7) அனைத்து கூட்டுறவு அமைப்புகளின் நோக்கம்
அ) இலாபம் ஆ) சேவை இ) சீர்திருத்த ஈ) சமூக

8) பன்னாட்டு நிறுமங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன?
அ) கிளைகள் ஆ) அதன் துணை நிறுவனங்கள்
இ) தலைமையகம் ஈ) நாடாளுமன்றம்

9) அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு .................க்குக் குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.
அ) 75% ஆ) 60% இ) 51% ஈ) 50%

10) கீழ்கண்ட எந்த அமைப்பில் ''மக்களாட்சி முறையில்'' மேலாண்மை நடைபெறுகிறது?
அ) நிறுமம் ஆ) கூட்டுறவுச் சங்கம்
இ) தனியாள் வணிகம் ஈ) கூட்டாண்மை

## பகுதி - ஆ

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 11க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்: **4×2=8**

11) பன்னாட்டு நிறுமத்தை வரையறுத்து ஏதேனும் இரண்டு உதாரணம் தருக.

12) பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

13) இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?

14) தனியாள் வணிகரின் வாழ்வை பற்றி கூறுக.

15) உழையா கூட்டாளி என்பவர் யார்?

16) சட்டமுறை நிறுமம் என்றால் என்ன?

## பகுதி - இ

ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17க்கு கட்டாயமாக விடையளிக்கவும்: **4×3=12**

17) வரையறா பொறுப்பு என்றால் என்ன? அதனால் ஏற்படும் நன்மை ஏதேனும் ஒன்று தருக.

18) பாண்டியர் ஆட்சி காலத்தில் பொருட்கள் விற்குமிடத்தை பற்றி கூறுக.

19) வணிகத்தின் உறுதுணைகள் ஏதேனும் இரண்டை விவரி.

20) தொழில் நடவடிக்கைகளின் அல்லது செயல்பாடுகளின் வகைகள் யாவை?

21) இந்து கூட்டுக்குடும்பத்தின் இயல்புகள் ஏதேனும் மூன்று தருக.

22) தயாரிப்பாளர்கள் கூட்டுறவு சங்கம் பற்றி சிறுகுறிப்பு வரைக.

## பகுதி - ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: **3×5=15**

23) வணிகத்தின் தடைகள் ஏதேனும் ஐந்தினை சுருக்கமாக விவரி.

**(அல்லது)**

பன்னாட்டு நிறுமத்தினால் ஏற்படும் நன்மைகள் ஏதேனும் 5 தருக.

24) தொழில், சிறப்புத்தொழில் மற்றும் வேலைவாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5)

**(அல்லது)**

நீதிமன்ற ஆணையில்லாமல் நிறுவனக்கலைப்பு எவ்வாறு ஏற்படுகிறது?

25) எந்த ஆவணம் ஒரு கூட்டுபங்கு நிறுமம் முறையாக அமைக்கப்பட்டதற்கான சான்று? அதன் உள்ளடக்கம் ஏதேனும் 4 தருக.

**(அல்லது)**

செயலின் அடிப்படையில் உற்பத்தித் தொழில்களை சுருக்கமாக விவரி.

---------